Paper Mill for Udangudi

* 72 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal pending now before the Government to establish a paper mill at Udangudi in Tiruchendur taluk in Tirunelveli district in the public sector; and

(b) if so, the particulars thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, காலஞ்சென்ற முதல் அமைச்சர் அண்ணாதுரை அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் அரசாங்கம் வரிவிதிப்புச் செய்யாமல் காகிதம் செய்தல் போன்ற சிறு தொழில்களை ஆரம்பித்து அரசாங்க வருவாயைப் பெருக்கிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்று சொன்னார்களே, அந்த யோசனையின் அடிப்படையில் இந்த அரசு — திருநெல்வேலியில் திருச்செந்தூர் தாலுக்காவில் காகிதத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைப்பதால் அங்கே அரசாங்கமே பத்திரிகை காகித உற்பத்தித் தொழிற்சாலையை ஏற்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காலஞ்சென்றதற்குப் பிறகாவது அப்பேரறிஞர் குறிப்பிட்டவற்றில் பொருள் இருக்கிறது என்பதை உணர்ந்து சுட்டிக்காட்டுவதற்கு பெரும் மகிழ்ச்சி. அந்தப் பகுதியில் யார் அந்தத் தொழிலை நடத்த முன்வந்தாலும் அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யத் தயாராய் இருக்கும்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து ஏராளமான அகதிகள் அந்தத் திருச்செந்தூர் தாலுக்கா பகுதிக்கு வர இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய புனர் வாழ்வுக்காக அரசு தரப்பிலேயே அந்தப் பகுதியில் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பத்திரிகைக் காகித உற்பத்தித் தொழிற்சாலையை அரசாங்கத் தரப்பில் ஆரம்பிப்பதாக இல்லை. இதுபோன்ற தொழில் இப்போதே பலவிடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் தனியார் துறையில் யார் ஆரம்பிக்க முன்வந்தாலும் அரசாங்கம் உதவி செய்யத் தயாராய் இருக்கிறது.

லாரி சொந்தக்காரர்கள் வேலை நிறுத்தம்

* 73 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 7—7—1970 தேதி அன்று தமிழ்நாடு முழுவதும் லாரிகள் ஓடவில்லை யென்பது உண்மையா ?

1970 நவம்பர் 30]

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) அதன் பேரில், சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) & (உ) : வினாக்களுக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஓடவில்லை என்பது உண்மை. லாரிகள் போகாத அளவுக்கு தடுத்து நிறுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது அல்லவா? எந்த லாரி சொந்த உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது? எந்த அடிப்படையில் சரி செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஓடவில்லை என்பது உண்மையல்ல. வரிவிதிப்பில் வரி உயர்த்தப்பட்டது. அதை லாரி சொந்தக்காரர்கள் எதிர்த்தார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தியதில் ஒரு சுமுகமான நிலை ஏற்பட்ட காரணத்தினால் வேலை நிறுத்தம் தடுக்கப்பட்டது.

திரு. கே. வினயகம்: வரி விதிக்கப்பட்டதன் காரணத்தினால் அதை எதிர்த்து அவர்கள் ஒரு வாரத்திற்கு முன்னேயே வேலை நிறுத்தம் செய்யப் போவதாக நோட்டீஸ் கொடுத்து 7-ஆம் தேதி வேலை நிறுத்தமும் நடந்தது. அன்று தமிழகம் பூராவும் லாரிகள் ஓடவில்லை. இந்தத் தகவல் அரசாங்கத்திற்கு ஒருவேளை தெரியாது இருக்க சந்தர்ப்பம் உண்டா? ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்யப்பட்டதன் காரணத்தினால்தான் அரசாங்கம் பிறகு அவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி சமாதானம் செய்துவைத்தார்கள் என்பது உண்மைதானே?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் அதை முழுக்க முழுக்க மறுக்கிறேன். எந்த ஒரு இடத்திலும் ஓடாமல் இருக்கவில்லை. 6-ஆம் தேதி மாலையே அரசாங்கம் ஒரு பரிகாரம் கண்டுவிட்டது. கட்டண உயர்வு அதிகம் என்ற காரணத்தினால் முதலில் 10 ரூபாய் குறைத்தோம். அதையும் ஆட்சேபித்தார்கள். பிறகு மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு சுமுகமான முடிவினை ஏற்படுத்தித் தந்த காரணத்தினால் 7-ஆம் தேதி வேலை நிறுத்தம் நடைபெறவில்லை.

செம்மினிப்பட்டியில் நீர்த்தேக்கம்

* 74 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில், செம்மினிப் பட்டி எனும் இடத்தில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.